## சனி பகவான் போற்றிகள்



கிரகங்களில் சனிபகவானைப்போல கொடுப்பவரும் இல்லை, கெடுப்பவரும் இல்லை எனலாம். ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் வரும் **ஏழரை** சனி, அஷ்டம சனி, ஜென்ம சனி ஆகிய காலங்கள் அவரவர்கள் முன்னாளில் செய்த பலன்களை அனுபவிக்க சனிபகவான் நீதி வழங்கும் காலங்களாகும். இத்துன்ப காலங்களில் தம்முடைய கர்மவினைகளுக்காக வருந்தி எதிர்காலத்தில் மற்றோர் மனம் வருத்தும் தவறான காரியங்களை செய்யாதிருப்பதாக உறுதி கொண்டு சனி பகவானை வேண்டி வழிபட்டால் அவருடைய கடும் தண்டனைகளிலிருந்து தப்பிக்க வழியுண்டு.

இத்தகு பெருமை வாய்ந்த சனிபகவானை போற்றி வழிபடுவதற்காக அன்னையே சனிபகவானின் குணங்கள், ஆற்றல்கள், செயல்கள் அனைத்தையும் போற்றி வழிபாடுகளின் மூலம் இயற்றி அளித்துள்ளார். இப்பகவானை சனிதோறும் காலையில் நல்லெண்ணெய் விளக்கொன்று ஏற்றி எள்மாவோடு வெல்லம் கலந்து வைத்து எட்டு முறை சனி பகவான் போற்றிகளை கூறி வழிபாடு செய்வதால் நல்ல நன்மைகள் கூடும்.

வீட்டில் இவ்வழிபாடு செய்வதற்கு கல்லில் செய்த லிங்கமும், நந்தியும் வைத்து அலங்கரித்து நல்லெண்ணெய் விளக்கேற்றி மேற்கூறிய பிரசாதம் வைத்து சிவன் போற்றிகள் ஒரு முறையும், சனிபகவான் போற்றிகள் எட்டு முறையும் சொல்லி வழிபடலாம். இதனால் **ஏழரை** சனி, அஷ்டம சனி, ஜென்ம சனிகால தொல்லைகளிலிருந்து விடுதலை பெறலாம்.

### போற்றிகள்

ஓம் சனிபகவானே சாந்த சொரூபனே போற்றி
ஓம் ஞாலத்தின் நாயகக் கோளே போற்றி
ஓம் அருணனின் புதல்வனே உன் திருவடி போற்றி
ஓம் காரிருள் உடல் அழகனே போற்றி
ஓம் கடுமையான குணம் உள்ளவனே போற்றி
ஓம் களிப்புடன் சரணடைந்தவரை காப்பவனே போற்றி
ஓம் காலனின் சகோதரனே போற்றி
ஓம் இராவணனை ஏமாற்றிய சீலனே போற்றி
ஓம் இடுக்கண் நல்கி அருள்புரிபவனே போற்றி
ஓம் காலத்தில் முடிக்கும் கரியவனே போற்றி 10
ஓம் சாயாதேவிக்கு உகந்தவனே போற்றி
ஓம் சாகாக்கலை உணர்த்தும் கோளே போற்றி
ஓம் இம்மையும் மறுமையும் உன் பிடியில் போற்றி
ஓம் இன்பமும் துன்பமும் உன் பார்வையில் போற்றி
ஓம் வாழ்வும் முடிவும் உன் தாளில் போற்றி
ஓம் ஏற்றமும் இறக்கமும் உன் அருளில் போற்றி
ஓம் தொலலையும் துன்பமும் போக்குவாய் போற்றி
ஓம் எல்லையின் இறுதியில் அமர்ந்தவனே போற்றி
ஓம் அந்தமில்லா ஞானம் அளிப்பவனே போற்றி
ஓம் கொடுப்பதில் உமக்கு ஈடில்லை யாரும் போற்றி 20

| | | | |
|---|---|---|---|
| ஓம் | கொடுத்த உயர்வுகளை காப்பவனே | போற்றி | |
| ஓம் | எடுத்த பணியினை முடிக்கும் வல்லவனே | போற்றி | |
| ஓம் | நல்லோர் பக்கத்துணை இருப்பவனே | போற்றி | |
| ஓம் | அல்லோரை தண்டித்து ஆள்பவனே | போற்றி | |
| ஓம் | தீமையை ஒழித்து காப்பவனே | போற்றி | |
| ஓம் | தீது குணமுடையோரை முடக்குபவனே | போற்றி | |
| ஓம் | இறையருள் பெற உதவுபவனே | போற்றி | |
| ஓம் | இன்பமுடன் வாழவும் துணை புரிபவனே | போற்றி | |
| ஓம் | விண்ணில் வியாபித்து விளங்குபவனே | போற்றி | |
| ஓம் | மண்ணில் ஆதிக்கம் புரிபவனே | போற்றி | 30 |
| ஓம் | மந்தனே சனியே முடவனே | போற்றி | |
| ஓம் | சிந்தை சிறக்கச் செய்பவனே | போற்றி | |
| ஓம் | நிந்தனை புரிவோர்க்கு நீசனே | போற்றி | |
| ஓம் | கல்லினும் கடிய மனம் கொண்டவனே | போற்றி | |
| ஓம் | காலத்தை கைக்குள் அடக்கிய தலைவா | போற்றி | |
| ஓம் | ஜீவனின் வாழ்வை நிர்ணயிப்பவனே | போற்றி | |
| ஓம் | தெய்வத்தின் துணையாய் நின்று இயக்குபவனே | போற்றி | |
| ஓம் | அபயம் அடைந்தவரை என்றும் காப்பவனே | போற்றி | |
| ஓம் | உபகார உள்ளம் கொண்டோர் அருகில் உள்ளவனே | போற்றி | |
| ஓம் | தக்க வாழ்வை அளிக்கும் தயாபரனே | போற்றி | 40 |
| ஓம் | மகரத்தில் உன் ஆட்சி விளங்கிடும் | போற்றி | |
| ஓம் | மனதில் உன் சிந்தனையே செயல்படும் | போற்றி | |
| ஓம் | மங்கிய ஒளியாய் பிரகாசிப்பவனே | போற்றி | |
| ஓம் | மங்காத பேரருள் ஒளி உண்டாக்குவாய் | போற்றி | |
| ஓம் | மாசில்லா நெறிகளில் உகந்திருப்பாய் | போற்றி | |
| ஓம் | மாற்றோர் அஞ்சும் சனி தேவனே | போற்றி | |
| ஓம் | தக்கோர் புகழும் தயாபரனே | போற்றி | |
| ஓம் | பக்கமுற்றோர் பாவம் கடிபவனே | போற்றி | |
| ஓம் | நாசியில் சற்றே கோண முற்றவனே | போற்றி | |
| ஓம் | ஆசிபுரிந்து எந்தனை காப்பாய் | போற்றி | 50 |
| ஓம் | கும்பத்தை இருப்பாய் உடையவனே | போற்றி | |
| ஓம் | அம்பலத்தில் ஆடுவான் பட்டம் உடையாய் | போற்றி | |
| ஓம் | அகிலத்தை அணைத்தே செயல் புரிவாய் | போற்றி | |
| ஓம் | நட்புற்றவரை நாளும் உயர்த்துவாய் | போற்றி | |
| ஓம் | கொற்றவனை உருவாக்கும் திருவே | போற்றி | |
| ஓம் | அற்றவராய் ஆக்கும் வலிமையே கொண்டாய் | போற்றி | |
| ஓம் | அனைத்து விதிகளும் உன் ஆட்சியால் | போற்றி | |
| ஓம் | அனைத்து பதவிகளும் உன் மாட்சியால் | போற்றி | |
| ஓம் | தீது அளித்து ஏற்றம் தருவாய் | போற்றி | |
| ஓம் | பாவம் நீக்கி பலவளம் நல்குவாய் | போற்றி | 60 |
| ஓம் | தராசில் ஏற்றமுடன் இருப்பவனே | போற்றி | |
| ஓம் | தவறாமல் நடுநிலை காப்பவனேபோற்றி | | |
| ஓம் | தயங்காமல் தீயதை துடைப்பாய் | போற்றி | |
| ஓம் | மயங்காமல் மனபலம் பெருக்குவாய் | போற்றி | |
| ஓம் | உயர்வான பெருநெறி புகட்டி அருள்வாய் | போற்றி | |
| ஓம் | தார்மீக வாழ்வை நிலைப்படுத்துவாய் | போற்றி | |
| ஓம் | தார்மீக பலன்களை தந்தருள்வாய் | போற்றி | |

ஓம் இகவாழ்வில் சிறக்கச் செய்வாய் போற்றி
ஓம் ஏகாந்த நிலையையும் உணர்த்துவாய் போற்றி
ஓம் பரமானந்த மார்க்கம் உன் திருவருள் பலனே போற்றி 70

ஓம் கசப்பு சுவையில் மகிழ்பவனே போற்றி
ஓம் இச்சை எண்ணங்களில் பற்றற்றவனே போற்றி
ஓம் நஞ்சையும் நல் அமிர்தாய் மாற்றும் வல்லவனே போற்றி
ஓம் கச்சையில் கருப்புத்துணி அணிந்தவனே போற்றி
ஓம் துச்சமென யாதையும் செய்யும் தீரனே போற்றி
ஓம் நிச்சய வெற்றியை முடிவில் நல்குபவனே போற்றி
ஓம் அச்சம் நீக்கி எம்மை ஆள்பவனே போற்றி
ஓம் காகத்தை வாகனமாய் கொண்டவனே போற்றி
ஓம் ஏகாந்தமாய் இருக்கும் அனுபவமே போற்றி
ஓம் சோகமே உருவாய் தோற்றம் கொண்டவனே போற்றி 80

ஓம் சோகமுற்றோர்க்கு யோக பலன் தருவாய் போற்றி
ஓம் ஆகம விதிகளை நெறிப்படுத்துவாய் போற்றி
ஓம் தாமத குணம் உடைய பெரியோய் போற்றி
ஓம் கோப குணமதில் மறைந்திருப்பாய் போற்றி
ஓம் கோபம் நீங்கில் உன் அருள் தோன்றும் போற்றி
ஓம் ஏகக் காலில் ஊனமுற்றவனே போற்றி
ஓம் போக வாழ்வை மறுப்பவனே போற்றி
ஓம் நாக தேவனும் ராகுவும் உன் சாயலே போற்றி
ஓம் நாக தோஷமும் போக்கும் திறனே போற்றி
ஓம் நடனமிடும் தில்லையவன் செயல் வடிவே போற்றி 90

ஓம் எள்ளில் ஏகபிரியம் உடையாய் போற்றி
ஓம் வள்ளலென அள்ளி ஈகும் குணம் உடையாய் போற்றி
ஓம் கொள்ளை கொண்டும் அனைத்தும் துடைப்பாய் போற்றி
ஓம் உள்ளத் தூய்மையில் உகந்திருப்பாய் போற்றி
ஓம் பள்ளமும் மேடும் வாழ்வினில் உன் ஒரு விழியால் போற்றி
ஓம் வெல்ல முடியாத குணம் பல கொண்டவனே போற்றி
ஓம் சொல்ல முடியாத பெரும் தகையவனே போற்றி
ஓம் அன்பில் ஆதிக்கம் செலுத்தி மகிழ்வாய் போற்றி
ஓம் துன்பத்தில் போதனை தந்தருள்வாய் போற்றி
ஓம் என்றும் குறையா பெருநலம் ஈவாய் போற்றி 100

ஓம் உலகில் அருள் நேறி சாரமே போற்றி
ஓம் உயிர்களின் ஞான வாழ்வின் தோற்றமே போற்றி
ஓம் மனங்களின் ஒழுக்க சீலமே போற்றி
ஓம் கோள்களில் ஈஸ்வர பட்டம் உடையவனே போற்றி
ஓம் நாட்களில் சனியில் உன் ஆதிக்கம் போற்றி
ஓம் வண்ணத்தில் கருமை உவப்பாய் போற்றி
ஓம் சனிக் கோளே ! ஞாலமுறும் வாழ்வே போற்றி
ஓம் சனீஸ்வரனே ! சங்கடம் நீக்கி ஆளவே போற்றி 108

உன் திருவடி போற்றி ! போற்றி ! போற்றி !